## வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டம் - 2015

வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 நவம்பர் 08 ஆந் திகதிய 4728-எல்கே ஆம் நிதியளித்தல் உடன்படிக்கையின் II பீ பிரிவின் 2 ஆம் பட்டியல் மற்றும் 2014 மே 08 ஆந் திகதிய ரீஎவ் 013787 ஆம் இலக்க மானிய உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம், முன்னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. கணக்களித்தல் மற்றும் பொறுப்புக்கூறல் முறையொன்றில் வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மூலம் உள்ளூர் உட்கட்டமைப்பு சேவைகளின் வழங்கலை முன்னேற்றுதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,497.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 106.30 மில்லினானதுடன் அதில் ரூபா 6,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் கடனாகவும் ரூபா 2,537 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 20.30 மில்லியன் மானியமாகவும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 மே 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர், 2016 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியம் என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடன் மற்றும் மானியம் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(இ) நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள 80 உள்ளூராட்சி சபைகளிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 359.10 மில்லியன் கூட்டுத் தொகையான மானிய பெறுகைகளில் ரூபா 29.20 மில்லியன் தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய உள்ளூராட்சி சபைகளின் கைகளில் செலவிடப்படாது இருந்ததுடன் அது செயற்திட்டத்தால் ஏற்பட்ட செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படடிருந்தது.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியளித்தல் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியலின் 1.3.4 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 364(3) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் வேண்டப்பட்டிருந்தவாறு மீளாய்வாண்டின் போது ரூபா 32.65 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சிவில் வேலைகள் மற்றும் பொருட்களுக்கான பெறுமதி சேர் வரிகள் தொடர்பான விபரமான கூற்றுக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட விடயம் முன்னைய ஆண்டிற்கான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் / மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | | | | | | | |
| - கடன் | 50.00 | 6,000 | 1,000 | - | - | 49.91 | 6,185.00 |
| - மானியம் | 20.30 | 2,537 | 1,200 | 3.11 | 407.58 | 11.19 | 1,575.27 |
| இலங்கை அரசாங்கம் | 34.00 | 3,740 | 42 | 0.17 | 22.12 | 14.23 | 1,568.69 |
| சமூக பங்களிப்பு | 2.00 | 220 | - | 0.14 | 18.84 | 4.78 | 529.19 |
| | **106.30** | **12,497** | **2,242** | **3.42** | **448.54** | **80.11** | **9,858.15** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விரிவான செயல்நடவடிக்கைத் திட்டமொன்றானது, செயற்திட்டக் காலப்பகுதியுடன் ஒதுக்கப்பட்ட நிதிகளை பயன்படுத்துவதன் மூலம் செயற்திட்ட நோக்கங்களின் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் கூறுகளை மேவுகை செய்து மாதாந்தம், காலாண்டு மற்றும் வருடாந்தம் மூலம் முழு செயற்திட்டக் காலப்பகுதியையும் மேவுகை செய்தலிலுள்ள பொறுப்புக்களை நிர்ணயிப்பதுடன் நிதிசார் மற்றும் பௌதீக ரீதியான இலக்குகளுடன் நிதிகளை ஒதுக்கி தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா ஐ.அ.டொலர் 20.30 மில்லியன் மானியத்தில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 11.19 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மிகுதியாகவுள்ள 01 வருட காலப்பகுதிக்குள் ஐ.அ.டொலர் 9.11 மில்லியன் எஞ்சிய தொகையினை பயன்படுத்துவதன் சாத்தியத்தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள 101 உள்ளூராட்சி சபை பிரதேசங்களில் செயற்திட்டத்தின் கூறு – 01 இன் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 10,170 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 90 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் செயற்திட்டத்தால் அமுல்படுத்தப்பட்டிருந்தன. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மீதான வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றங்கள் கீழே தரப்படுகின்றன.

| செயற்பாடுகள் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | பூர்த்திசெய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட வேலைகள் | பூர்த்தி செய்யப்பட்ட வேலைகள் | அடைதலின் சதவீதம் |
| நுழைவு வீதி அபிவிருத்தி | | | |
| - தாரிடல் | 865 கிலோமீற்றர்கள் | 379 கிலோமீற்றர்கள் | 43 |
| - கொங்கிறீட் இடல் | 135 கிலோமீற்றர்கள் | 259 கிலோமீற்றர்கள் | 191 |
| பூங்காக்கள், சந்தைகள் மற்றும் சிறிய நகரங்களின் அபிவிருத்தி என்பவற்றின் நிர்மாணங்கள் | 405 எண்ணிக்கைகள் | 171 எண்ணிக்கைகள் | 42 |
| கழிவுநீர் மற்றும் வடிகாலமைப்பு முறைமைகளின் புனரமைப்புக்கள் | 245 கிலோமீற்றர்கள் | 41 கிலோமீற்றர்கள் | 16 |
| கழிவுநீரகற்றல் முறைமைகளின் புனரமைப்புக்கள் | 66 எண்ணிக்கைகள் | 01 எண்ணிக்கை | 1.5 |
| கிராமிய நீர் வழங்கல் முறைமைகள் | 439 எண்ணிக்கைகள் | 22 எண்ணிக்கைகள் | 0.5 |
| கிராமிய மின்மயமாக்கல் முறைமைகள் | 187 கிலோமீற்றர்கள் | 23 கிலோமீற்றர்கள் | 12 |

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், குறிப்பிடத்தக்க இலக்குகளை விஞ்சுகின்ற வீதிகளின் கொங்கிறீட் இடலுக்கான வேலைகள் தவிர அனைத்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகளும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மந்தமான முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் மிகுதியாகவுள்ள காலப்பகுதிக்குள் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகளின் இலக்குகளை அடைதல் மீதான ஐயப்பாடுகளை கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது.

(ஆ) 2013 மே 09 அளவில் பூரணப்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட புங்குடுதீவிலுள்ள முதுதவேலி சந்தையின் நிர்மாணத்திற்கு ரூபா 14.15 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2015 திசெம்பர் 31 இலும் கூட பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகளுக்கான உரிய அதிகாரசபையினால் முரண் கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த போதிலும் 38 முரண் கட்டளைகளின் கீழ் ரூபா 89.40 மில்லியன் கூட்டுத்தொகையான வேலைகளின் நோக்கெல்லைகளுக்கான மாற்றங்கள் பின்னர் செயற்திட்டப் பணிப்பாளர் அல்லது உரிய உள்ளூராட்சி சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் உள்ளடக்கப்பட்ட நிர்மாண வேலைகளின் நோக்கெல்லையின் குறிப்பிடத்தக்களவு முரண்களின் சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| வேலை விபரம் | அளவீட்டுப் பட்டியலின் பிரகாரம் வேலைகளின் மதிப்பிடப்பட்ட கிரயம் | அங்கீகரிக்கப்பட்ட வேலைகளின் முரண்கள் |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| நிந்தவூர் சிறுவர் பூங்கா | 4.89 | 30.74 |
| மூளாய் பாடசாலை வீதி | 1.38 | 8.48 |

(ஆ) முசலி பிரதேச சபையின் சிலாவத்துறை வீதி மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் அச்சம்குளம் வீதி என்பவற்றில் 2016 மே 23 இல் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ரீதியான தள விஜயங்களின் போது மேற்பரப்புக்களில் வெடிப்புக்கள் மற்றும் சேதங்கள் போன்ற குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தமையானது புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியின் போது மண்ணிடல் மற்றும் வீதி மட்டமிடல் நோக்கங்களுக்காக உள்ளடக்கப்பட்ட தர உறுதிப்படுத்தல் நுட்பத்திலுள்ள தவறுகைகளை சுட்டிக்காட்டியிருந்தது.

(இ) 132 நடவடிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் 100 நாட்களை விஞ்சிய தாமதங்களுடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. அவற்றில் 16 அபிவிருத்தி வேலைகள் 01 வருடத்தை விஞ்சிய கால தாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. மேலும் தம்பலகாம பிரதேச சபையில் லிங்கா வீதி மீள்நிர்மாணம் மற்றும் வேலணை பிரதேச சபையில் முத்தவெளி சந்தையின் நிர்மாணம் என்பன 03 வருடங்களை விஞ்சிய தாமதங்களுடன் பூர்த்தியாக்கப்பட்டது. எனினும், ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது உரிய உள்ளூராட்சி சபைகளின் உத்தியோகத்தர்களினாலோ அல்லது செயற்திட்டப் பணிப்பாளரினாலோ 01 முதல் 06 வரையான சந்தர்ப்ப வீச்சில் காலங்களின் நீடிப்பு அனுமதிக்கப்பட்டிருந்தது.

## 3.4 பயனற்ற அல்லது குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடக்கு மாகாணத்திலுள்ள முசலி, நானாட்டான், மன்னார், மாந்தை கிழக்கு மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளில் தொலைவிலுள்ள மற்றும் குறைந்த மக்களையுடைய பிதேசங்களிலுள்ள ரூபா 459.91 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்காக்கள், சந்தைகள், பஸ் முடிவிடங்கள், கடைத் தொகுதி, பயிற்சி நிலையம் மற்றும் கலாச்சார மண்டபம் போன்ற 32 அபிவிருத்தி வேலைகள் 2 வருடங்களிற்கு மேலாக பயனற்றிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) தலைமன்னார் புகையிரத நிலையம், இரணையிலுப்பைக்குளம், பெரியமடு மற்றும் ஆண்டான்குளத்தில் சந்தையின் நிர்மாணிக்கப்பட்ட கடைத்தொகுதி மற்றும் நல்லூர் பிரதேச சபையில் சிறுவர்களுக்கான உள்ளக விளையாட்டரங்கு, பயிற்சி நிலையம் மற்றும் கலாச்சார மண்டபம் என்பன உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்துவதற்கு பதிலாக 2014 ஆம் ஆண்டிலிருந்து வேறு நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.5 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் பிரகாரம், பெறுமதி சேர் வரி கொடுப்பனவுகளுக்கான பதிவுச் சான்றிதழ்களின் செல்லுபடியாகும் தன்மையை சரிபார்க்காது 19 தடவைகளில் நகர சபையொன்று மற்றும் 09 பிரதேச சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட சிவில் வேலைகளில் தெபடர்புபட்ட ஒப்பந்தகாரர்களிற்கு கடன் பெறுகைகளிலிருந்து ரூபா 16.2 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரிகள் செலுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் கருத்துள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வடக்கு மாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் சிவில் வேலைகளுக்கான 03 உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச்செவ்வையின் போது கூறுவிலை ஆவணங்களிலுள்ள விலை வீதங்களின் மாற்றங்கள் மூலம் ரூபா 4.42 மில்லியன் மோசடித்தன்மையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அவற்றின் மீதான பொறுப்புவாய்ந்த தரப்பினர்களுக்கெதிராக கருத்துள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்கான கேள்வியாளர் தெரிவிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் தலைவராக செயற்திட்டப் பொறியியலாளர் தொழிற்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தத்தினை தனது சொந்தக் கம்பனிக்கு வழங்கியிருந்தார் என அவதானிக்கப்பட்டது. அவற்றின் மீதான பொறுப்புவாய்ந்த தரப்பினர்களுக்கெதிராக கருத்துள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.